மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.07/2024
அ.வ.எண்.80/2020

1. சரசு
2. பெருமாள்
3. கதிரவன் ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

காந்தாமணி ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 27.06.2024 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மணிகண்ட ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>உத்தரவு</u>

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 10 மற்றும் பிரிவு 151ன் கீழ் அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு முடியும் வரை இவ்வழக்கை மேற்கொண்டு நடத்தாமல் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : –

(i) மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் அ.வ.எண்.80/2020 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி எதிர்மனுதாரரால் குறிப்பிடப்படும் சொத்தானது மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தை 1ம் மனுதாரரது தாயார் எதிர்மனுதாரரின் கணவர் ஒரு பண்ணயத்தில் வேலை பார்த்து வந்த நிலையில்,

அவருக்கு திருமணம் செய்ய உதவ வேண்டி 1ம் மனுதாரரது கணவர் அவருக்கு 3 சென்ட் நிலம் வீடு கட்டிக்கொள்ள அனுமதித்தார். அதை வைத்துக் கொண்டு எதிர்மனுதாரர் தாவா சொத்து அவர்களுடையது என பொய்யான காரணங்களை கூறி இவ்வழக்கை தொடர்ந்துள்ளார்.

(ii) மனுதாரர்கள் மேற்படி எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்களுக்கு எதிராக அ.வ.எண்.102/2020 என்ற வழக்கை தொடர்ந்து மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. அவ்வழக்கில் 1ம் மனுதாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்டு, அடுத்த சாட்சியாக அவரது மகனை விசாரித்துள்ளனர். மேற்படி இருவழக்குகளும் ஒரே சொத்து ஒரே பொருள் குறித்து ஏற்பட்ட வழக்காகும். மேற்படி எதிர்மனுதாரருக்கு மனுதாரர்களால் வழங்கப்பட்ட 3 சென்ட் நிலம் மட்டுமே பாத்தியமாகும். ஆனால் அவர்கள் அதிகப்படியான நிலத்திற்கு உரிமை கொண்டாடி பொய் வழக்காடுகின்றனர். அவ்வழக்கில் மனுதாரர்களுடைய பதிலுரையை அனுசரித்து இரு வழக்குகளும் ஒரு சேர நடத்தப்பட்டிருக்க வேண்டும்.

(iii) ஆனால் அதில் எதிர்மனுதாரர் இருவழக்குகளையும் நடத்தாமல் தன்னுடைய வழக்கில் மட்டும் சாட்சிய வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளனர். அதன் பிறகு ஆவணங்களை குறியீடு செய்வதாக கூறி இதுநாள் வரை வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை. மனுதாரர்களுடைய வழக்கில் சாட்சிய விசாரணைகள் முடிந்த பிறகு அவர்களுடைய வழக்கில் சாட்சியை விசாரிக்கப்பட வேண்டும் என சாட்சியை விசாரித்து குறுக்கு விசாரணைக்கு அனுமதித்துள்ளனர். இரு வழக்குகளிலும் உள்ள தரப்பினர்கள் சொத்து அதன் பரிகாரம் கருப்பொருள் யாவும் ஒன்றாகும். இந்நிலையில் இருவழக்குகளும் தனித்தனியாக நடத்தப்பட்டால் அதில் குறியிட வேண்டிய ஆவணங்கள், சாட்சியங்கள் யாவும் தனித்தனியாக தாக்கல் செய்யப்பட வேண்டும். அவைகளை மீண்டும் ஒரு முறை நகல் எடுத்து தாக்கல் செய்து விசாரிக்க பொருள் செலவு, கால செலவு ஏற்பட்டு சிரமங்கள் ஏற்படும். மேலும் நீதிமன்றத்தின் நேரமும் வீணாகும். மேற்படி விசாரணையிலுள்ள மனுதாரர்களுடைய வழக்கு முடிவு எட்டப்பட்டாலே இவ்வழக்கில் தனியே ஒரு தீர்வு காண வேண்டிய நிலையில்லை. எனவே மனுதாரர்களுடைய வழக்கு முடிவுறும் வரை இந்த எதிர்மனுதாரர் தாக்கல்

செய்த வழக்கு நிறுத்தி வைக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் மனுதாரர்கள் இதுவரை எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை. அதனால் இவ்வழக்கில் மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது என தடையுத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு முடியும் வரை இவ்வழக்கை மேற்கொண்டு நடத்தாமல் தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

(i) மனு பொய்யானது. மோசடியானது. சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள சட்டப்பிரிவுகள் தவறு. இம்மனு கோப்புக்கு எடுக்க தகுதியற்றதாகும். ஒரு குறிப்பிட்ட செயலை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யும்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயல்படுத்தாமல் அந்த காலம் முடிந்து அம்மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின் அதை மீண்டும் திறக்க முடியாது என்பது நன்கு நிலை நிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். எனவே இம்மனு அவ்வகையான கோரிக்கைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல. மேற்படி வழக்கானது எதிர்மனுதாரர் கடந்த 30.11.2023ம் தேதியில் வாதி தரப்பு சாட்சி 1ல் ஆவணங்கள் முடிக்கப்பட்டும், அன்றே பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக 09.01.2024 ல் போடப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர்/வாதி மேற்படி விசாரணைக்காக நேரில் ஆஜராகியும், மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக கால அவகாசம் கேட்டும் மேற்படி கடந்த 21.02.2024ம் தேதியில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு, வாதி தரப்பில் விசாரணைக்கு ஆஜராகியும், பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தால் அவர்கள் தாக்கல் செய்த மனுவின்பேரில் மேற்படி குறுக்கு விசாரணையை கடந்த 11.03.2024ல் இவ்வழக்கின் எதிர்மனுதாரர்/வாதியான குறுக்கு விசாரணைக்காக நேரில் ஆஜராகியும், மேற்படி மனுவின் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது சட்டப்படியும்,

நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இம்மனுவின் மூலமாக மனுதாரர்கள் நீதிமன்ற விசாரணையை காலதாமதப்படுத்தி இழுத்தடிக்க வேண்டியும், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சுமை சேர்க்கும் விதமாகவும் செயல்பட்டு வரும் மனுதாரர் வேண்டுமென்றே எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. இதுபோன்ற நிலைக்கத்தகாத மனுக்களை ஒன்றன் பின் ஒன்றாக மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்து எதிர்மனுதாரரை இழுத்தடிக்க வேண்டியும், நீதிமன்ற நடவடிக்கைகளை வழக்கின் காலதாமதத்தையும் இழுத்தடிக்கிறார். எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/வாதியால் அ.வ.எண்.80/2020 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் உள்ளது என்றும், அதேபோல் மேற்படி எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்களுக்கு எதிராக மனுதாரர்களால் அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை துவங்கப்பட்டு நிலுவையில் உள்ளது என்றும், மேற்படி இருவழக்குகளிலும் தரப்பினர்களும், கருப்பொருள் யாவும் ஒன்றே என்றும், மேற்படி இருவழக்குகளும் ஒரே சமயத்தில் விசாரிக்கப்பட்டால் வீண் பொருட்செலவு மற்றும் காலவிரயத்தை தவிர்ப்பதோடு, நீதிமன்றம் சரியான முடிவுக்கு வர இயலும் என்றும், எனவே மனுதாரர்களுடைய அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு முடிவுறும் வரை எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண்.80/2020 என்ற வழக்கை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டும் என தெரிவித்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்களின் கோரிக்கை நிலைக்கத்தக்கதல்ல என்றும், அ.வ.எண்.102/2020 என்ற வழக்கில் வழக்கு விசாரணை துவங்கப்பட்டு நடைபெற்று வரும் நிலையில், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மனுதாரர்கள் நீதிமன்ற விசாரணையை காலதாமதப்படுத்தி இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறியுள்ளது தெரியவருகிறது.

(iii) மனு பிரமாணப்பத்திரிக்கை பரிசீலனை செய்ததில் மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/ வாதியால் அ.வ.எண்.80/2020 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை துவங்கப்பட்டு, வா.சா.1 ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது தெரியவருகிறது. அதேபோல் மனுதாரர்களும், எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்களுக்கு எதிராக அ.வ.எண்.102/2020 என்ற வழக்கை தாக்கல் செய்து, அதிலும் வழக்கு விசாரணை துவங்கப்பட்டு, வா.சா.2 ன் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது தெரியவருகிறது.

(iv) இந்நிலையில் அ.வ.எண்.80/2020 ல் பிரதிவாதிகளான இம்மனுதாரர்கள் தாங்கள் தாக்கல் செய்த அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு முடிவுறும் வரை எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.80/2020 என்ற வழக்கின் விசாரணையை நிறுத்தி வைக்க கோரி உ.வி.மு.ச. பிரிவு 10 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேற்படி மனுவின் தகுதிப்பாட்டை தீர்மானிக்கும் முன் உ.வி.மு.ச. பிரிவு 10 ஐ பார்வையிட வேண்டியது அவசியமாகிறது. உ.வி.மு.ச. பிரிவு 10 ஆனது,

> "10.Stay of suit:- No court shall proceed with the trial of any suit in which the matter in issue is also directly and substantially in issue **in a previously instituted suit** between the same parties, or between parties under whom they or any of them claim litigating under the same title where such suit is pending in the same or any other court in (India) having jurisdiction to grant the relief claimed, or in any court beyond the limits of (India) established or continued by the Central Government and having like jurisdiction, or before (the Supreme Court)."

என கூறுவது தெரியவருகிறது.

(v) தற்போது மனுதாரர்கள் முன்னிலைப்படுத்தும் சங்கதிகளை பரிசீலனை செய்கையில், தரப்பினர்களுக்கிடையே அ.வ.எண்.80/2020 என்ற வழக்கும், அ.வ.எண்.102/2020 என்ற வழக்கும் ஒரே கருப்பொருள் தொடர்பாக நிலுவையில் உள்ளது தெரியவருகிறது. மேற்படி இரு வழக்குகளில் அ.வ.எண்.80/2020 என்ற வழக்கு முதலில் எதிர்மனுதாரரால் மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதும், அ.வ.எண்.102/2020 என்ற வழக்கு மனுதாரர்களால், எதிர்மனுதாரர் மற்றும் அவரது மகன்கள் மீது பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

(vi) இந்நிலையில் மேற்படி சட்டப்பிரிவு 10ன்படி ஒரே தரப்பினரிடையே ஒரே கருப்பொருள் தொடர்பாக இரு வழக்குகள் ஒரே நீதிமன்றத்திலோ அல்லது தகுதி வாய்ந்த வேறு நீதிமன்றத்திலோ நிலுவையில் இருக்கும் பட்சத்தில், முந்தைய வழக்கில் நேரடியாக மற்றும் பிரதானமாக தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது பிந்தைய வழக்கிலும் தீர்மானிப்பட வேண்டியிருந்தால், மேற்படி பிந்தைய வழக்கின் விசாரணையை முந்தைய வழக்கு முடிவுறும்வரை நிறுத்தி வைக்க வேண்டும் என்பதே ஆகும். மேற்படி சட்டப்பிரிவின் நோக்கமே ஒத்த அதிகார வரம்புடைய நீதிமன்றங்கள் ஒரே சமயத்தில் ஒரே தரப்பினரிடையே ஒரே கருப்பொருள் மற்றும் ஒரே வழக்குமூலம் கொண்ட இருவேறு வழக்குகளை ஒருங்கே தீர்மானிக்க கூடாது என்பது தான். அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி சட்டப்பிரிவு 10ன்படி தரப்பினரிடையே உள்ள பிந்தைய வழக்கை தான் தடை செய்ய இயலுமே அன்றி, முந்தைய வழக்கை தடை செய்ய இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மேற்கண்ட விவாதங்களின் அடிப்டையில் இவ்வழக்கில் தரப்பினரிடையே நிலுவையிலுள்ள இருவழக்குகளில், முந்தைய வழக்கான அ.வ.எண்.80/2020 என்ற வழக்கை உ.வி.மு.ச. சட்டப்பிரிவு 10ன்கீழ் தடை செய்ய இயலாது எனவும், இரு வழக்குகளிலும் வழக்கு விசாரணை துவங்கப்பட்டு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், ஒருவேளை மனுதாரர்கள் இரு வழக்குகளிலும் ஒரே சமயத்தில் வழக்கு விசாணை நடத்த வேண்டும் என கருதினால், மேற்படி இரு வழக்குகளிலும் குறிப்பாணை தாக்கல் செய்வதன் மூலம் அவற்றை ஒரே தேதியில் பட்டியலிட்டு,

வழக்கு விசாரணை நடத்தலாமே அன்றி, முந்தைய வழக்கான அ.வ.எண்.80/2020 ன் வழக்கு விசாரணையை, பிந்தைய வழக்கான அ.வ.எண்.102/2020 ன் வழக்கு விசாரணை முடியும்வரை நிறுத்தி வைக்க இயலாது எனவும், இம்மனு தகுதிப்பாடற்றது எனவும் கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.06 18:36:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:- இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை</u>

R MANIVARMAN

Digitally signed by R MANIVARMAN
Date: 2024.08.06 18:36:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.